# நா. முத்துக்குமார் பாடல்களில் மனித உணர்வுகள்

**பூ. டில்லி பாபு**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**

**திருவஞ்சேரி , சென்னை - 600 126**

45

**முன்னுரை**

இரண்டாயிரமாண்டு கால சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் தனித்த அடையாளங்களுடன் கவனம் பெறுகின்றன. குறிப்பாக காதல் , காதல் சார்ந்த செய்திகளைப் பதிவு செய்த வகையில் பல்வேறு இலக்கிய வகைகள் காணக் கிடைக்கின்றன. அவற்றில் பாடல்கள் எளிமையான முறையில் இயற்றப்பட்டு நேரடியாக மக்களைச் சென்றடையும் கலை வடிவமாகும். பாடல் வகைகளில் திரைப்படப் பாடல்களுக்கு என்று தனித்துவம் எப்போதும் இருக்கிறது . நூறாண்டு காலத் தமிழ்த் திரைப்பட உலகில் பெரும்பான்மையான பாடல்களை இயற்றிய கவிஞர்கள் காலத்தால் இன்னும் அழியாத படைப்புகளைத் தந்து உயிர்ப்போடு விளங்குகின்றனர். அந்த வகையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் , மருதகாசி, உடுமலை நாராயண கவி , கண்ணதாசன், வாலி, வைரமுத்து, பழநி பாரதி, பா.விஜய், கபிலன், யுகபாரதி, சினேகன், விவேகா வரிசையில் நா. முத்துக்குமார் திரைப்படப் பாடல்களில் மனித உணர்வுகளை அதன் ஆழம் சூழல் ஆகியவற்றோடு பதிவு செய்துள்ளார் என்பதனை இக்கட்டுரை மூலம் அறியலாம் .

**நா. முத்துக்குமார் பிறப்பும் படைப்பும்.**

காஞ்சிபுரம் மாவட்ட கன்னிகா புரத்தைச் சேர்ந்தவர். தம்முடைய நான்காம் வயதில் தாயை இழந்தார். சிறுவயதில் இருந்தே புத்தகங்களை உலகமாக கொண்டக் இவர் காஞ்சிபுரம் ஆண்டரசன் மேல்நிலைப் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் இயற்பியல் , அறிவியல் இளவர் மற்றும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்று கலை முதுவர் பட்டமும் பெற்றார். பின்னர் தமிழ்த் திரைப்பட பாடல்கள் 1990 முதல் 2000 வரை என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார். தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியில் இயக்குனர் பிரிவில் இணைய விண்ணப்பித்து இடம் கிடைக்காததால் இயக்குனர் பாலு மகேந்திராவிடம் ஒரு நான்கு ஆண்டுகள் உதவி இயக்குனராகப் பணி செய்தார். பின்பு தம்முடைய கவிதை ஆர்வத்தினை வளர்த்துக் கொண்டதுடன் திரைப்படப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். சீமான் இயக்கிய வீரநடை என்ற படத்தில் தன் முதல் பாடலை எழுதினார். கிட்டத்தட்ட 1500 பாடல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இவர் 2016 வரை தமிழ்த் திரை உலகின் முன்னணி பாடலாசிரியராகப் இருந்தார். அதன் பிறகு பாடல் எழுதுவதில் மட்டுமில்லாமல் வசன கருத்தாவாகவும் இருந்திருக்கிறார். பட்டாம்பூச்சி பதிப்பகம் என்ற பெயரில் பதிப்பகம் தொடங்கினார். அணிலாடும் முன்றில் , ஆனா ஆவன்னா , என்னை சந்திக்க கனவில் வராதே , கண் பேசும் வார்த்தைகள் , கிராமப்புறம் குழந்தைகள் நிறைந்த வீடு , நினைவு ஒரு பறவை , நியூட்டனின் மூன்றாம் விதி , பட்டாம்பூச்சி விற்பவன், பாலகாண்டம், வேடிக்கைப் பார்ப்பவன், முதலான நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

தமிழ் மொழியை முதன்மைப் பாடமாக எடுத்துப் பயின்று , பணி வாய்ப்புகள் ஏதுமின்றி தவிக்கும் இளைஞனை மையப்படுத்திய கற்றது தமிழ் திரைப்படத்தில் இவருடைய பாடல்கள்

கவனிக்கத்தக்கதாக அமைந்தன. இப்படத்தின் “பறவையே எங்கிருக்கிறாய் ” என்னும் பாடல் மூலம் சொல்லப்படும் காதலன் , காதலியைச் சந்திக்க த் துடிக்கும் உணர்வுகளையும், தன் காதலியைச் சந்திக்கும் முன் அவனுக்கு ஏற்படும் இன்னல்களையும் , பயண துயரங்களையும் நா. முத்துக்குமார் மிக எளிமையான வரிகளில் பதிவு செய்துள்ளார். முகவரி இல்லாத முகவரி சரியாகக் குறிப்பிடப்படாத வேற்று முகவரியில், வேற்று மாநிலத்தில் வாழும் தம் காதலியை ஒரு கடிதத்தை முழுமையாக நம்பி அதன் அடிப்படையில் தேடியலையும் தமிழ்ப் படித்த இளைஞனின் மன உணர்வுகளை வரிகளாக்கித்தந்துள்ளார்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, எனும் ஐவகை நிலங்களில் தலைவன் கடந்து செல்லும் வழியில் ஒவ்வொரு இடத்துக்கும் அழுத்தம் சூழ்நிலை, கருத்தும் மாறுபாடு நிகழ்வதைப் பதிவு செய்துள்ளார். அதில் குறிஞ்சி நிலம் எடுத்தால் மலையும் மலை சார்ந்த இடமும் காதலர்கள் சேர்ந்து வாழும் நினைவுகளும் பூத்திருக்கும் பூக்களும் காட்சி அமைக்கப்படும். திரைப்படப் பாடல்களில் காதலர்கள் ஒன்றாக சேர்ந்தால் குறிஞ்சி நிலப் பகுதியும் அல்லது முல்லை நிலப் பகுதியும் காட்சி அமைப்பு அதிகமாக காட்டப்படுகின்றன. அதிலும் காதல் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை நிலம் பொதுவாகவே காட்சி அமைக்கப்படும். அதில் பாலை பகுதியில் காதலன் காதலியை நினைத்து வாழும் நினைவுகளும் தேடி செல்லும் நிலைகளும் திரைப்படப் பாடல் மூலம் காணலாம். இப்படத்தின் காதலன் பயணங்களின் எப்படி எல்லாம் வேதனைப்படுகிறான். கஷ்டங்களும் , துயரங்களும், காதலியின் நினைவுகள் பார்க்க தவிக்கும் நிலை நம்மை அதன் வரிகளில் கொண்டு போய் விடுகிறார் பாடல் ஆசிரியர் நா முத்துக்குமார்.

பல திரைப்படப் பாடல்களில் காதலன் காதலியைப் பிரிந்து செல்லும் பொழுது பாலைப் நிலக் காட்சி அமைப்பைப் பயன்படுத்துவார்கள். எடுத்துக்காட்டாக ‘மரியான், திரைப்படத்தில் “நெஞ்சே எழு ” என்ற பாடலைச்சுட்டலாம். இப்பாடலில் தலைவியை சந்திக்கத் தவிக்கும் தலைவன் எந்த அளவிற்கு வேதனைகளுடனும், சுடும் வெயிலினும் வருகிறான் .என்பது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்று ‘கற்றது தமிழ் , படத்தில் காதலன் கடிதத்தை வைத்துத் தன் காதலியை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் தலைவன் மனதில் தோன்றுவதாக வரிகளை அமைத்துள்ளார் .

கடிதத்தில் விவரங்கள் இல்லாமல் காதலன் தடையங்கள் தேடி வருகிறேன் அன்பே என்று காதலியைத் தேடிச் செல்கிறான். மனித வாழ்வில் காதலைப் பலர் தவறாகவே நினைத்துக் கொள்கிறார்கள். அதில் இருக்கும் அன்பும் , நட்பும், பாசமும், காதலும், சின்னச் சின்ன ஊடலும் இன்று வரை காதல் செய்பவர்களுக்கு மட்டும் தான் தெரியும் அவற்றைப் பிறர் அறிய வாய்ப்பில்லை காதலிக்கத் தொடங்கியதும்,

‘முதல் முறை வாழப் பிடிக்குதே
முதல் முறை வெளிச்சம் பிறக்குதே
முதல் முறை முறிந்த கிளை ஒன்று பூக்குதே
முதல் முறை காற்று வருகுதே
முதல் முறை கதவு திறக்குதே
முதல் முறை கனவு பலிக்குதே அன்பே ,

என வளரும் நா. முத்துக்குமாரின் இவ்வரிகளில் எளிமையான வார்த்தைகளில் காதலன் காதல் செய்வதற்கு முன்பு இருந்த வாழ்க்கையையும். காதலித்துப் பிறகு வாழ்ந்த நிலைகளும் விவரிக்கப்பட்டுள்ளது . காதலில் தலைவனுக்கு ஒரு புதிய வாழ்க்கை உருவாகிறது . அவளுக்காக வாழும் வாழ்க்கை இருட்டாக இருந்த நெஞ்சில் வெளிச்சம் பிறந்தது போலவும் புயல் காற்று அடித்து முறிந்த கிளையில் பூ பூத்தது போலவும் காதலன் தன் வாழ்வில் மாற்றம் காண்கிறான்.

**மெய்ப்பாட்டு உணர்வு**

மெயில் படுவது மெய்ப்பாடு. அதாவது உள்ளத்து உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு. உடலில் நகைச்சுவைகள் , மெய் உணர்வுகள் இவை அனைத்தும் புறப்பொருளில் தோன்றியன. இவை அன்றி காதல் வாழ்க்கையில் காதலுக்கிடையே தோன்றும் நிலைப்பாடுகள் அவத்தை , அழிவில், ஒப்பு, ஒப்பின்மை என்னும் உணர்ச்சிகளாகக் காட்டப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் மனித உணர்வுகள் பற்றி சுட்டப்பட்டுள்ளது. மனிதனின் ஒவ்வொரு உணர்வின் வகைகளைக் தம் பாடல்களில் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார். நா. முத்துக்குமார் . திரைஇசைப் பாடலில் பசி, தாகம், பாலுணர்வு, உறங்குதல், விழித்தல் முதலானவை உயிரினங்களுக்கு உள்ள பொதுவான அகத்திணை , எழுச்சி, உணர்வுகள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், ஆகிய ஐந்தும் புறத்தாக்க உணர்வுகள்.

நகை, அழுகை,இளிவரல், மருட்கை, அச்சம்,பெருமிதம், வெகுளி, உவகை,

மனித உணர்வுகள் தாண்டி விலங்குகள் மீது உள்ள பாசப் பினணப்புகளை மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள உணர்வு நிலைகளில் மாற்றங்கள் இல்லை என்பதை நிறுவியுள்ளார் .

**மனித உணர்வுகள்**

மனித வாழ்வின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது மனித உணர்வுகள் ஆகும் . பல்வேறு தமிழ் இலக்கியங்களின் செம்மை பண்புகளுக்கு ஆதாரமாக விளங்கும் இவ்வுணர்வுகள் அகநிலை மற்றும் புற நிலைகளில் அமைகின்றன . மக்களின் உணர்வுகளை மையமிட்ட கலை படைப்புகளில் திரைப்படங்களும் பாடல்களும் சமூக மாற்றங்களுக்கு இடம் தருவன ஆகின்றன . உணர்வுகள் அடிப்படையில் வாழ்க்கை உள்ளது. அதில் அன்பு ஒன்றை மனிதனின் இயல்பாகப் பார்க்கலாம். உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கும் அன்பு நேர்மையாகவும் வலிமையாகவும் இருக்கிறது. எளிமையான மகிழ்ச்சி முதல் ஆழ்ந்த தனித்தன்மையான பாசம் வரை பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது. அன்பு என்ற சொல் குறிக்கும் பொருட்களின் எல்லைகளை விளக்க முற்படுகையில் ஒருவன் தன் தாயின் மீது கொண்ட அன்புக்கும் தன் காதலியிடம் கொண்டுள்ள அன்புக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதால் அன்பின் சில பரிணாமங்களை உணரலாம். இரக்கம், பாசம் ,பரிவு பணிவு, நல்லொழுக்கம், கோபம் மோகம் சிரிப்பு அழுகை முதலான பல்வேறு நிலைகளில் மனித உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன .

**நா. முத்துக்குமார் வரிகளில் உணர்வுகள்**

தமிழ்த் திரைப்பட பாடல் ஆசிரியர்களுக்கான சவால்கள் என்னவென்றால் பாமர மக்களையும் சென்றடையும் வகையில் மிக எளிமையான பாடல் வரிகளை கையாளத் தெரிந்திருக்க வேண்டும் என்பதுதான். அந்த வகையில் நா. முத்துக்குமாரின் பாடல்கள் மனித உணர்வு நிலைகளை பல்வேறு

கூறுகளின் அடிப்படையில் படித்தவர்களில் இருந்து இசையைப் பிடித்தவர்கள் வரை உணர்ந்து கேட்கக் கூடியதாகவும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளதை காண முடிகின்றது . பாடல்வரிகளில் அர்த்தம் இருந்தால் தூங்கிக் கொண்டிருந்த செல்கள் கூட தானகவே விழித்துக் கொள்ளும் . காதல், காதல் தோல்வி, ,குடும்பம் ,நம்பிக்கை, ஏமாற்றம்,இழப்பு, முதலான பல்வேறு உணர்வுகளைப் பாடல் மூலம் கொண்டு வந்தவர் கவிஞர் நா. முத்துக்குமார். இவருடைய காதல் வரிகளை கவனிக்கும்பொழுது மிக எளிமையாகக் தெரிகிறது. தன் காதலியின் நினைவுகள் வந்து போகும் ஒரு தலைக் காதலின் உணர்வுகளைப் பல பாடல்களில் நேர்த்தியாக எழுதியுள்ளார். தந்தை மகன் தந்தை மகள் உறவுகள் இவர் பாடல்களில் மிகுதியாக காணக் கிடைக்கின்றன .

நா. முத்துக்குமாரின் காதல் பாடல்களை உற்றுநோக்கிய விதத்தில் காதல் உணர்வுகள் மட்டும் இன்றி மனித வாழ்க்கைக்கான ஆழமான தத்துவங்களும் ஔந்திருப்பதை இனம் கண்டு கொள்ள முடிகின்றது . எளிமையான வரிகளைக் கையாண்ட விதமும் அனைவருக்கும் வரிகள் புரிய வேண்டும். என்ற எதார்த்தமான பார்வையில் மனித வாழ்க்கை மற்றும் உணர்வுகளைப் பாடல்களின் வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளார்.

முத்துக்குமார் எழுதிய ஒரு சில பாடல்களில் காதல் , ஒரு தலைக் காதல் தத்துவ வரிகள் , கல்லறை, மழைக் காதல், வெயில் காதல் போன்ற மனித உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

**ஜென் தத்துவம்**

உலகில் உள்ள முதன்மையான மதங்களினூடாக மூன்று தத்துவங்கள் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் தோன்றின அவற்றில் ‘இந்து மதத்தில் இருந்து மாயா தத்துவம்’ ‘இஸ்லாம் மதத்திலிருந்து சூபியிசத் தத்துவம்’ பௌத்த மதத்திலிருந்து ஜென் தத்துவம் வெளிப்படுத்தப்பட்டன. ஜென் இந்து , இஸ்லாம், பௌத்த மதங்களின் தத்துவங்களையும் செயல்பாடுகளையும் அல்லது அவற்றின் தன்மைகளையும் குறிப்பதாக இல்லை இன்னும் சொல்லப்போனால் இவைகள் தத்துவங்கள் அவ்வளவுதான். அந்த வகையில் ஜென் தத்துவம் புத்த மதத் துறவிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு தத்துவம் என பொதுவாகவும் மேலோட்டமாகவும் சொல்லிக் கொள்ளலாம். ஜென் பற்றி அறியும் முன் ஸென் என்பதன் சொல்லுக்கான விளக்கம் பெறுவது அவசியமானது அந்த வகையில் ஜென் என்னும் சொற்பதம் தியானம் என்னும் சமஸ்கிருத மொழியின் விரிவாக கருதப்படுகிறது. சமஸ்கிருதத்தில் உள்ள ஒரு சொல் தியானா என்பதாகும். இச்சொல் பானியில் ஸானா என வழங்கப்படுகிறது. ஸானா என்னும் இச்சொல் சீனாவில் ஜான்- னா என்றும் மருவி பின் ஜப்பானுக்குள் நுழையும்போது இச்சொல் ஜென்னோ இன் எனவும் ஸென்னா எனவும் தெளிவுற்று இறுதியில் ஜென் என வழங்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது. தியானத்தின் கருத்தையே மேற் குறிப்பிட்ட சொற்கள் யாவும் உணர்த்துகின்றன . தற்காலத்தில் தமிழில் ஜென் என்ற சொற்பதத்தை ஜென் , சென் என்றெல்லாம் எழுதும் உச்சரிக்கும் போக்கும் உள்ளது .

‘தத்துவம் என்பது பார்ப்பது ஜென் என்பது பங்கு கொள்வது'

ஜென் நம்முள் உறங்கு நிலையில் உள்ள ஞானத்தை உசுப்பி எழுப்பிகிறதோ தவிர மாறாக அது யாரையும் ஞானியாக மாற்றுவதில்லை. ஏனென்றால் புத்தன் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று சொல்கிறது. ஜென் எப்படி என்றால் நாமே ஒரு புத்தர் தான் என்கிறது .

**வெயில்- அழகு**

வெயில் காலங்களைப் பொதுவாக யாரும் விரும்ப மாட்டார்கள் . வெயில் காலங்களில் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டை நாம் பார்த்திருப்போம். வெயில் திரைப்படத்தின் காட்சி அமைப்பில் நமக்கான சிறுவயதில் நடந்ததை ஞாபகப் படுத்தியுள்ளார் கவிஞர் நா .முத்துக்குமார்.

'வெயிலோடு விளையாடி வெயிலோடு உறவாடி வெயிலோடு மல்லுக்கட்டி ஆட்டம் போட்டோமே'

இப்பாடலின் மூலம் சிறு வயது விளையாட்டின் அனுபவத்தை வெயில் கொளுத்துகின்றது என்று தெரியாமல் கூட அதில் விளையாடிய விளையாட்டுகளைப் வரிகளில் இப் பாடலின் மூலம் பதிவு செய்துள்ளார்.

**அப்பா மகள் உறவு**

திரைத் துறையில் பொதுவாக அம்மா மகள் பாசப்பிணைப்புகளைக் காட்சிப்படுத்துவார்கள் அதற்கு மாற்றாக கவிஞர் அப்பா மகளுக்கும் உள்ள பாச உணர்வுகளை இப்பாடல் வரிகளில் ஈர்த்துள்ளார். தேசிய விருது பெற்ற இப் பாடல்

'ஆனந்த யாழை மீட்டுகிறாய் அடி நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய் அன்பெனும் குடையை நீட்டுகிறாய் அதில் ஆயிரம் மழைத்துளிக் கூட்டுகிறாய்'

என்று எழுதப்பட்டுள்ளது. மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்குத் தான் தெரியும் முத்தம் காமத்தை சேராது என்று . இவருடைய வரிகளுக்கு ஏற்றார் போல் திரைப்படக் காட்சியமைப்பும் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

**காதல் கொண்டேன்**

'காற்றினில் கிழியும் இலைகளுக்கெல்லாம் காற்றிடம் கோபம் கிடையாது '

என்னும் பாடல் வரிகளில் ஒவ்வொரு வார்த்தையும் தத்துவ வரிகளாகும் கண்ணதாசன், வாலி, வைரமுத்து வைத் தொடர்ந்து தத்துவப் பாடல்களைத் தமிழ்த் திரை உலகில் அதிகமாக இயற்றித் தந்தவர் நா.முத்துக்குமார் என்பது விளங்குகிறது.

கைக்கிளை

கைக்கிளை என்பது ஒரு தலை காதல் ஆகும். கை என்பது சிறுமை எனப் பொருள்படும் கிளை என்பது உறவு எனப் பொருள் படும் சிறுமையான உறவு அல்லது பெருமை இல்லா உறவு என்பது கைக்கிளை பொருள். சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் மனிதனின் காதலன் உணர்வுகள் பற்றிய பதிவுகள் உள்ளன. அதில் ஒருதலைக் காதல் வெற்றியும் சொல்லப்பட்டுள்ளன. இக்காலகட்டத்தில் ஒரு தலைக் காதல் என்றாலே தவறு என்று சொல்வதும் உண்டு. மனிதன் எல்லோருக்கும் ஒரு தலை காதல் கண்டிப்பாக வரும். மனித உணர்வுகளைப் அப்படியே திரைப்படத்திற்கு ஏற்றவாறு தலைவன் தலைவியின் உணர்வுகளை புரிந்து கொண்டு கவிஞர் ஒரு தலை காதலை மிக நேர்த்தியாக கையாண்டு உள்ளார்.

'காற்றில் இலைகள் பறந்த பிறகும் கிளையின் தழும்புகள் அழிவதில்லை '

தலைவன் தலைவி பிரிதல் பிரிதல் நிமித்தமும் காதலி காதலனைப் பிரிந்து உன் நினைவுகள் என்றும் என் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கும். காதல் பிரிவு வரிகள் இவ்வளவு உவமையாக எழுதப்பட்டுள்ளன.

‘காட்டிலே காயும் நிலவு கண்டுகொள்ள யாருமில்லை கண்களின் அனுமதி வாங்கி காதலும் இங்கே வருவதில்லை'

தனிமையின் வலிகளும் தவிப்பும் மனதின் ரணங்களை வரிகளில் இயற்கையோடு உருவகப் படுத்தியும் ஒருதலைக் காதலை நன்கு வெளிப்படுத்தி காட்டியுள்ளார்.

‘கண்ணாடி என்றும் உடைந்தாலும் கூட பிம்பங்கள் காட்டும் பார்க்கின்றேன்’

காதலி பிரிந்தே சென்றாலும் காதலின் நினைவுகள் சொல்லும் ஜென் கவிதை முத்துக்குமாரின் வரிகளில் பாடல்களில் அதிகமாகவும் ஜென் தத்துவத்தை திரை இசை பாடல்கள் பயன்படுத்தியுள்ளார். காதல் செய்யாதவர்கள் கூட இப்பாடல்களை கேட்கும் பொழுது காதல் செய்வார்கள்.

உடன்போக்கு

பண்டைய தமிழகத்தில் காதல் கொண்ட தலைவனும் தலைவியும் பிறருக்குச் சொல்லாமல் ஊரை விட்டு சென்று விடுவது உடன் போக்கு . தோழி அறிவுரைக் கூறி தலைவியத் தலைவனுடன் அனுப்பி வைத்தலும் சங்க இலக்கியங்களில் உள்ளன . காதல் திரைப்படத்தில் காதலன் காதலியின் உடன் போக்கு நிகழ்வையும் அதில் வரும் வலிகளையும் , தன்னம்பிக்கையையும், முன்னேற்றத்தையும் நா. முத்துக்குமாரின் கீழ்க்கண்ட வரிகள் உணர்த்துகின்றன .

‘மின்சார கம்பிகள் மீதும் மைனாக்கள் கூடு கட்டும் நம் காதல் தடைகளைத் தாண்டும் வளையாமல் நதிகள் இல்லை வலிக்காமல் வாழ்க்கை இல்லை’

மேலும் கதைக்கேற்ற மாதரி பாடல் வரிகளில் காதலன் காதலி உடன்போக்கில் ஈடுபடுவதும் அதில் வலிகளின் நிலைகளையும் , வாழ்க்கைத் தத்துவம் காதல் வாழ்க்கை சிறப்பாக வாழ்வதற்கு இது போன்ற தத்துவ வரிகளை எழுதியுள்ளார் .

நா. முத்துக்குமார் பாடல்களில் கல்லறை பற்றிய பதிவுகள் ஒரு சில பாடல்களில் பதிவு செய்துள்ளார் . கல்லறை பற்றி தனித்துவம் கொடுத்த மூன்று பாடல்கள் உருவகம் ஆங்கிலத்தில் metaphor சொல்வார்கள் இப்பாடலை தவிர்த்து அதிகமாக எழுதியுள்ளார் அதில் கல்லறை பற்றி காதல் கொண்டேன் திரைப்படத்தில் எழுதிய வரிகள்.

‘கல்லறை மேலே பூக்கும் பூக்கள்
கூந்தலைப் போய் தான் சேராது’

கல்லறைகளில் அழகான ரோஜா பூ பூத்திருந்தாலும் யாரும் அவற்றை பறிக்க வர மாட்டார்கள் பறித்தாலும் பெண்கள் சூடிக்கொள்ள மாட்டார்கள் மேலும் காதல் திரைப்படத்தில் ,

‘ கல்லறை மீது தான் பூத்த பூக்கள் என்று
வண்ணத்துப்பூச்சிகள் பார்த்திடுமாம் ,

என்றும் முன்பு சொன்ன பாடல் வரிகளில் இடுகாட்டில் பூத்த பூக்கள் மனிதர்களிடையே மதிப்பில்லாமல் இருந்தது ஆனால் இப்பாடல்வரிகளில் அவ்விடத்தில் பூக்கள் யாரும் விரும்பவில்லை என்றாலும் பரித்து சூடிக் கொள்ள விருப்பமில்லை என்றாலும் அங்கு வண்ணத்துப்பூச்சிகளும் வண்டுகளும் தேடி வந்து சேரும் என்பதை பதிவு செய்துள்ளார்.

‘ஒரு நாளில் வாழ்க்கை இங்கே எங்கும் ஓடிப் போகாது

மறுநாளும் வந்து விட்டால் துன்பம் தேயும் தொடராது ,

மனிதனின் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் வந்து போகும். துன்பம் அதிகமானால் வாழ்க்கை வலிகளால் சிதைந்து போகும் .தனிமையும், சோகத்தையும் இப்பாடல் வரிகளில் காண முடியும் எந்த சோகமும் ஒரு நாள் தான் நான்கு நாள் ஆன பிறகு சோகத்தின் அடர்த்தி குறையும். இதைத்தான் இப்பாட்டின் பல்லவியில் நா. முத்துக்குமார் அவருடைய வரிகளில் எழுதி உள்ளார்.

**முடிவுரை**

நா.முத்துக்குமாரின் திரைப்படப் பாடல்களை ஆராய்ந்த விதத்தில் காதல் மற்றும் காதல் சார்ந்த உணர்வு நிலைகள் மனித அகநிலை புறநிலைகளில் உணர்வுகளில் முறையை தந்தை மகன் தந்தை மகள் உணர்வுகள் குடும்ப உறவுகள் உடன் போக்கு நம்பிக்கை ஏமாற்றம் இழப்பு இயற்கை கல்லறை முதலானவை பற்றிய தத்துவமான உணர்வு நிலைகள் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது